திரு. கே. டி. கே. தங்கமணி : அம்மாதிரி அரசுக்கு ஆலோசனை இருக்குமென்று சொன்னால் இப்போது கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நிறைய காலியிடம் இருக்கிறது. அந்த இடத்தில் கட்டும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் புதிதாகக் கட்டுவதாக இருந்தால் அதற்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டைத் தேர்ந்தெடுத்தால் மேலும் போக்குவரத்து நெருக்கடிகள் தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும். ஆகவே இன்னும் கொஞ்சம் தொலைவில் கிண்டிப் பகுதியில் அதைக் கட்டலாமா என்று யோசிக்கிறோம். அதுவும் அம்மையார் அவர்கள் சொன்ன பிறகு அந்த யோசனையில் எங்களுக்குக் கொஞ்சம் அழுத்தம் பிறக்கிறது.

திரு. என். கணபதி : பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து உயர்நீதிமன்றத்தின் ஒரு பகுதியை மதுரைக்கு மாற்றுவதாக இந்த அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து அம்மாதிரி ஒரளவிற்கு திருச்சி அல்லது மதுரைக்கு மாற்றும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் சொல்லாத ஒன்றை நான் சொன்னதாகச் சொல்லி கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். நான் உயர்நீதிமன்றத்தை மாற்றுவதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொல்லவில்லை. ஹாண்டே அவர்களின் கேள்விக்கு, அவசரப்பட்டு அலுவலகங்களைப் பகிர்ந்து ஆங்காங்கே வைப்பது பற்றி எந்த முடிவும் சொல்ல முடியாது, அது ஆராயப்பட வேண்டும் என்றுதான் சொன்னேன்.

பர்மா, இலங்கை அகதிகள்.

* 562 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பர்மா, இலங்கை அகதிகள் நம் மாநிலத்தில் எத்தனை பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

பர்மா அகதிகள்.—45,621 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 2,502 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள்.—3,747 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 108 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : பர்மா, இலங்கை அகதிகளைப் பொறுத்த வரையில் நமது அரசு எந்தெந்தத் துறைகளில் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள்? இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து என்ன உதவி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மேற்கொண்டும் பர்மா, இலங்கையிலிருந்து வரும் அகதிகள் எவ்வளவு பேர்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

LEGISLATURE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1971 சூலை 30]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1964-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 1,19,304 பேர்கள் வந்திருக்கிருர்கள். இன்னும் ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் பேர்கள் வருவதாக அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. இவர்கள் புனர்வாழ்விற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன.

* 563 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a number of Burma evacuees have arrived in Madras City in June 1971; and

(b) if so, the details of the places where they have been provided accommodation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) 502 சிருர்கள் உட்பட 1,493 அகதிகள் 1971, ஜூன் 9-ஆம் நாள் அன்று வந்தனர். அவர்களுள், 162 சிருர்கள் உட்பட 527 அகதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்படில் உள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 92 சிருர்கள் உட்பட 227 அகதிகள் கும்முடிபூண்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 40 சிருர்கள் உட்பட 96 அகதிகள், கீழப்புலியூரிலுள்ள நிலக்குடியேற்ற திட்டத்தின்கீழ் புதுவாழ்வு வசதிகள் அளிக்கப்படுவதற்காக திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பப்பட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாத்தூரிலுள்ள ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு இல்லத்தில் சேர்க்கப்படுவதற்காக ஒரு அகதி அனுப்பப்பட்டார். 27 சிருர்கள் உட்பட 55 அகதிகளும், 13 காபின் பயணிகளும் அவரவர் விருப்பப்படி அவர்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டனர். பிற மாநிலங்களுக்குச் செல்வதற்காக இருந்த எஞ்சிய அகதிகள் அவரவர்களுடைய மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அம்மையார் தொகுதியிலுள்ள பர்மா அகதிகளுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

புதிய பிச்சைக்காரர் இல்லங்கள்.

* 564 விஞ—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் புதிய பிச்சைக்காரர் இல்லங்கள் (Beggar Homes) திறக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலூரில் ஒரு பிச்சைக்காரர் இல்லம் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.